**செய்தி வெளியீடு எண்: 864** **நாள்: 27.11.2018**

## செய்தி வெளியீடு

ஐக்கிய அரபு நாட்டிலுள்ள ஷார்ஜாவில் ஒரு முன்னணி நிறுவனத்தில் பணிபுரிய டிப்ளமோ மெக்கானிக் தேர்ச்சி பெற்ற மேற்பார்வையாளர்கள் (Fabrication), பத்தாம் வகுப்பு தேர்ச்சியுடன் ஐ.டி.ஐ படித்த Steel Structural Fabricator, Radiographic Quality 4G Arc, MIG Welders, CNC Plasma & CNC laser Machine இயக்குபவர்கள் (AUTOCAD) மற்றும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற ஐக்கிய அரபு நாட்டின் செல்லத்தக்க Light Duty Driver (3 & 4) மற்றும் Bus Driver (6&3) உரிமம் உள்ள ஓட்டுநர்கள் தேவைப்படுகிறார்கள். மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு 01/12/2018 (சனிக்கிழமை) அன்று காலை 9.00 மணிக்கு நேர்காணல் நடைபெறும்.

மேலும் டிப்ளமோ மெக்கானிக் தேர்ச்சி பெற்ற QA/QC ஆய்வாளர்கள் மற்றும் Documentation Controllers, பத்தாம் வகுப்பு தேர்ச்சியுடன் ஐ.டி.ஐ படித்த CNC programmer/Lathe Machine இயக்குபவர்கள், Automation Control & Instrumentation technician, தொழிற்சாலைகளில் பணிபுரிந்த Electricians, மற்றும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற Workshop Maintenance Mechanic, Automotive Mechanic with Disel Engine அனுபவம் மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரிந்த அனுபவமுள்ள ஸ்டோர் கீப்பர்கள் தேவைப்படுகிறார்கள். மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு 02/12/2018 (ஞாயிற்றுக்கிழமை)அன்று காலை 9.00 மணிக்கு நேர்காணல் நடைபெறும்.

மேற்காணும் அனைத்து பணியாளர்களுக்கும் குறைந்தபட்சம் மூன்று வருடம் முதல் எட்டு வருடம் வரை பணி அனுபவம் மற்றும் 28 முதல் 35 வரை வயது வரம்பு இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு திறமைக்கேற்றவாறு ஊதியம், உணவு, இருப்பிடம், விமான பயணச்சீட்டு, மருத்துவம் மற்றும் காப்பீட்டுத் திட்டம் போன்ற சலுகைகள் ஐக்கிய அரபு நாட்டின் சட்ட திட்டத்திற்க்கேற்றவாறு வழங்குவதுடன் மிகை நேர ஊதியமும் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பணியிடங்களுக்கு உரிய தகுதி மற்றும் விருப்பமிருப்பின், தங்களின் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி, அனுபவம், செல்லத்தக்க பாஸ்போர்ட் நகல்கள் மற்றும் மூன்று புகைப்படத்துடன் ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்திலுள்ள, அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், எண்.42 ஆலந்தூர் சாலை, திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600032 அலுவலகத்தில் நடைபெறும் நேர்காணலில் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஊதியம் மற்றும் பணிவிவரங்களை இந்நிறுவன வலைதளம் www.omcmanpower.com மற்றும். 044- 22505886 / 22500417/ 8220634389 /9566239685 என்ற தொலைபேசி எண்களின் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முகவர் எண். RCNo.B-0821/CHENNAI/CORPN/1000+/5/308/84 ஆகும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**